DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 120 / 2022
Deposition of Cross OF Pw.3 தங்கமணி( வனக்காப்பாளர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.01.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - அன்றைய தினம் நான் விக்னேஷ் வனவர், ராசசேகர் வனக்காப்பாளர், குமார் வனக்காவலர் ஆகிய நான்கு நபர்களும் ரோந்து பணி மேற்கொண்டோம். ரோந்து பணி மேற்கொள்ளுவதற்கு முன்பாக அலுவலகத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு அங்கு இருந்து நடந்து ரோந்து பணி மேற்கொண்டோம். அலுவலகத்தில் வாகனத்தினை நிறுத்தும் போது 6.45 முதல் 7.00 மணிக்குள் இருக்கும். எங்கள் அலுவலத்திற்கு பின்புறம் சந்தமலை உள்ளது. ஆஜர் எதிரிகளில் 1 வது எதிரியின் தலைமீது சுமை இருந்தது. எதிரிகள் எங்களை பார்த்ததும் சுமையை இறக்கி வைத்துவிட்டார்கள். அந்த சுமையானது 70 கிலோவிற்கு மேலியிருக்கும். சந்தமலை பகுதியை ஒட்டி தனியாருக்கு சொந்தமான நிறைய தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த தோட்டங்களில் விளையக்கூடிய வேளாண் பொருட்களை வனவிலங்குகள் சேதப்படுத்தாத அளவிற்கு முன் எச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனியார் தோட்ட உரிமையாளர்கள் அவர்களின் வேளாண் தோட்டப்பயிர்களை காப்பதற்காக வனவிலங்குகளை விவசாய நில பகுதிக்குள் வரவிடாமல் தடுக்கும் பொருட்டு வெடி பொருட்கள் நிரப்பிய அவுட்டுகளை இரவு நேரத்தில் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் வாய்ப்பில்லை. அதுபோல் ஏதேனும் தோட்ட உரிமையாளர் வைத்த வெடியில் பன்றி சிக்கி இறந்திருக்கலாம். இந்த பன்றி இறப்பதற்கு புள்ளிவிபர கணக்கிற்காக எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டு பலிகெடாவாக்கப்பட்டுள்ளார்கள். மலை பகுதியில் ரோந்து செல்லும்போது மொத்தமாக தான் செல்வோம் தனித்தனியாக செல்வதில்லை. ஆஜர் எதிரிகள் மீது இது போன்று முன் வழக்குகள் ஏதும் இல்லை. ஆஜர் எதிரிகளை சம்பவ இடத்தில் கையும் களவுமாக பிடித்தோம் என்பது பொய் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளிடம் சம்பவ இடத்தில் வாகனம் எதுவும் இருந்ததா என்றால் சம்பவ இடத்தில் இல்லை வனப்பகுதிக்கு அருகில் இருந்தது. சம்பவத்திற்கும் எதிரிகளும் துளிகூட சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எங்களது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எதிரிகளுக்கு தெரியாது என்றால் தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எதிரிகளுக்கு தெரியாது எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கிற்கு ஏற்ப பூர்த்தி செய்து கொண்டது என்றால் சரியல்ல.

இத்துடன் முதல் தரப்பு குறுக்கு விசாரணை 2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்று கொள்ளப்பட்டது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.01.30 17:10:27 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 120 / 2022
Deposition of Cross OF Pw.2 ரா. விக்னேஷ் ( வனவர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.01.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - அன்றைய தினம் நான் தங்கமணி வனக்காப்பாளர், ராசசேகர் வனக்காப்பாளர், குமார் வனக்காவலர் ஆகிய நான்கு நபர்களும் ரோந்து பணி மேற்கொண்டோம். ரோந்து பணி மேற்கொள்ளுவதற்கு முன்பாக அலுவலகத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு அங்கு இருந்து நடந்து ரோந்து பணி மேற்கொண்டோம். அலுவலகத்தில் வாகனத்தினை நிறுத்தும் போது 6.45 முதல் 7.00 மணிக்குள் இருக்கும். எங்கள் அலுவலத்திற்கு பின்புறம் சந்தமலை உள்ளது. ஆஜர் எதிரிகளில் 1 வது எதிரியின் தலைமீது சுமை இருந்தது. எதிரிகள் எங்களை பார்த்ததும் சுமையை இறக்கி வைத்துவிட்டார்கள். அந்த சுமையானது 70 கிலோவிற்கு மேலியிருக்கும். சந்தமலை பகுதியை ஒட்டி தனியாருக்கு சொந்தமான நிறைய தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த தோட்டங்களில் விளையக்கூடிய வேளாண் பொருட்களை வனவிலங்குகள் சேதப்படுத்தாத அளவிற்கு முன் எச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனியார் தோட்ட உரிமையாளர்கள் அவர்களின் வேளாண் தோட்டப்பயிர்களை காப்பதற்காக வனவிலங்குகளை விவசாய நில பகுதிக்குள் வரவிடாமல் தடுக்கும் பொருட்டு வெடி பொருட்கள் நிரப்பிய அவுட்டுகளை இரவு நேரத்தில் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் வாய்ப்பில்லை. அதுபோல் ஏதேனும் தோட்ட உரிமையாளர் வைத்த வெடியில் பன்றி சிக்கி இறந்திருக்கலாம். இந்த பன்றி இறப்பதற்கு புள்ளிவிபர கணக்கிற்காக எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டு பலிகெடாவாக்கப்பட்டுள்ளார்கள். மலை பகுதியில் ரோந்து செல்லும்போது மொத்தமாக தான் செல்வோம் தனித்தனியாக செல்வதில்லை. ஆஜர் எதிரிகள் மீது இது போன்று முன் வழக்குகள் ஏதும் இல்லை. ஆஜர் எதிரிகளை சம்பவ இடத்தில் கையும் களவுமாக பிடித்தோம் என்பது பொய் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளிடம் சம்பவ இடத்தில் வாகனம் எதுவும் இருந்ததா என்றால் சம்பவ இடத்தில் இல்லை வெளியில் இருந்ததாக சொன்னார்கள். சம்பவத்திற்கும் எதிரிகளும் துளிகூட சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எங்களது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எதிரிகளுக்கு தெரியாது என்றால் தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எதிரிகளுக்கு தெரியாது எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கிற்கு ஏற்ப பூர்த்தி செய்து கொண்டது என்றால் சரியல்ல.

இத்துடன் முதல் தரப்பு குறுக்கு விசாரணை 2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்று கொள்ளப்பட்டது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.01.30 17:10:38 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 120 / 2022
Deposition of Cross OF Pw.1 நாகராஜன் வனச்சரக அலுவலர் (ஓய்வு)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.01.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - காலை 9.00 மணிக்கு வனச்சரக அலுவலகத்தில் இருந்த போது தகவல் கிடைக்கப் பெற்று அதன் பெயரில் சம்மந்தபட்ட ஆட்களை அலுவலகத்திற்கு கொண்டு வந்துவிட்டார்கள். சந்தமலை பகுதியில் சந்தேகப்படும் ஆட்களை விசாரித்து தெரிந்துக்கொண்டார்கள். என்னிடம் சொல்லும்போது எதிரி தலைசுமையாக சாக்குபையில் சுமந்து வந்ததாக சொன்னார்கள். அதன் எடை சுமார் 60 கிலோ இருக்கும் நான் எடை போட்டு பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகளுக்கு சந்தமலை அருகே தோட்டங்கள் எதுவும் இல்லை. மற்ற நபர்களுக்கு அந்த பகுதியில் தோட்டங்கள் உள்ளது. அந்த தோட்டத்தில் உள்ள வெள்ளாமை பயிர்களை சேதபடுத்த அளவுக்கு தடுப்பு எதுவும் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அது போன்று தோட்ட உரிமையாளர்கள் பன்றிகளின் வருகையை தடுப்பதற்காகவும் வெடிபொருட்களின் அவுட் வைத்து பன்றிகளை கொல்வதற்கு வாய்ப்புகள் உள்ளதா என்றால் சாத்தியம் உள்ளது. ஆனால் இந்த வழக்கில் எதிரிகள் தலை சுமைகளுடன் பிடிபட்டார்கள். அன்றைய தினத்தில் சந்த மலை வனப்பகுதிகளுக்கு யார் யார் ரோந்து பணிக்கு சென்றார்கள் என்றால் தங்கமணி வனக்காப்பாளர்(Guard) மற்றும் குமார் வனக்காவலர் ( Watcher) ஆகியோர் அன்று ரோந்து பணியில் ஈடுபட்டார்கள். அதற்கு தனிபதிவுகள் இல்லை. வாரத்திர Diary குறிப்புகள் மட்டுமே உள்ளது அந்த Diary நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. ஆஜர் எதிரிகளில் முதல் எதிரி ஏத்தக்கோவில் ஊரை சேர்ந்தவர் 2 வது எதிரி பாலகோம்பை ஊரை சேர்ந்தவர் என்றும் அந்த இரண்டு ஊருக்கும் அருகே மலை சார்ந்த வனப்பகுதிகள் உள்ளது என்றும். அந்த வனப்பகுதிகளிலும் பன்றிகள் உள்ளது என்றால் சரிதான். ஏத்தக்கோவிலுக்கும் சந்தமலை பகுதிக்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். அதைப்போல் பாலக்கோம்பை பகுதிக்கும் சந்தமலை பகுதியிக்கும் 20 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் பன்றி வேட்டையாட வேண்டும் என்றால் இவ்வளவு தூரம் வந்து வேட்டையாட வேண்டிய அவசியம் இல்லை. சந்தமலையை ஒட்டியே உள்ள தோட்டத்து உரிமையாளர்கள் அவர்களின் வேளாண்பயிர்களை காப்பதற்காக வைக்கப்பட்டுள்ள வெடி விபத்தில் இறந்து போன பன்றியை கணக்கு காட்டுவதற்காக அப்பாவியான எதிரிகள் மீது இது போன்ற பொய்யான வழக்கு

போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வனவர் மற்றும் வனக்காப்பாளர் எதிரிகளை கையும் காளவுமாக பிடித்தது என்று சொல்வது பொய் என்றும் அதை போல் நான் எதிரிகளிடம் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக சொல்லுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் அவர்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தினை பற்றி இதுவும் சொல்லப்படவில்லை. இந்த சம்பந்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் துளி அளவு சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து கிடந்த பன்றிக்கு யார் மீதாவது வழக்கு போட்டாக வேண்டும் என்ற புள்ளி விபர கணக்கிற்காக இந்த எதிரிகள் பலிகெடா ஆக்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>மேற்படி குறுக்கு விசாரணை 2 வது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்று கொள்ளப்பட்டது.</u>

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.01.30 17:10:47 +0530

Judicial Magistrate,
Andipatti.